## அரச நிறுவனங்களுடைய தற்காலிக மிகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 (சீ) ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக அரச நிறுவனங்களுடைய தற்காலிக மிகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரம் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 ஆகஸ்ட் 03 இல் கைசாத்திட்ட நம்பிக்கைப் பொறுப்பாளரின் ஒப்பந்த ஆவணத்தின் 12 ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் படி, நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வண்டின் போது எந்தவொரு கூட்டமும் நடைபெறவில்லை.

(ஆ) 2006 யூன் 27 ஆந் திகதிய புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் (எம்ஓயூ) 6 ஆவது விடயத்தின் படி, குறைந்தது 6 மாதங்களிற்கான அவற்றினுடைய உத்தேச நிதிப் பாய்ச்சல் விபரங்களை நிதிய முகாமையாளர்களிற்கு சமர்ப்பிக்குமாறு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தனிப்பட்ட பங்கேற்றல் அரசாங்க நிறுவனங்களை நம்பிக்கை பொறுப்பாளர்கள் கோரலாம். எவ்வாறாயினும், அத்தகைய உச்தேச நிதிப் பாய்ச்சல்கள் மீளாய்வாண்டிற்காக நிதிய முகாமையாளரால் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 07 ஆம் விடயத்தின் படி, அரச நிறுவனங்கள் நிதிய முகாமையாளரின் கவனத்திற்கு கொண்டு வருவதன் மூலம் எந்த நேரத்திலும் வட்டியுடன் சேர்த்து முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையை நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடமிருந்து மீள்பெறுகைகள் செய்வதற்கு தகுதியுடையவை என குறிப்பிடப்பட்டுள்ளது. நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 17 ஆம் விடயத்தின்படி, எழுத்து மூலம் கொடுப்பனவுகளிற்காக வேண்டுகையொன்று கிடைக்கப்பெற்ற 10 நாட்களிற்குள் அவர்களுடைய நிதிகளை திரும்ப பெறுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பு

நலனாளிகள் தகுதியுடையவர்களாகின்றனர். எவ்வாறாயினும், ரூபா 10.7 பில்லியனை மாற்றியதன் காரணமாக, திறைசேரி நம்பிக்கை நிதியத்திற்கு மீளல் செய்த நிதியை மீளச்செலுத்தினாலேயன்றி நலனாளிகள் நம்பிக்கை பொறுப்பாளர் நிதியத்திலிருந்து நிதிகளை மீளப்பெறுவதற்கு முடியாதுள்ளனர்.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிச் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போதான நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,457.5 மில்லியன் பங்கிலாபத்திற்கு முந்திய நேரொாத்த தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 1,113.4 மில்லியன் பங்கிலாபத்திற்கு முந்திய தேறிய வருமானத்தை விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் 24 சதவீதமான ரூபா 344.1 மில்லியன் குறைவைக் காண்பித்தது. திரட்டு நிதியத்திற்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்காக முதிவடையாத வைப்புக்கள் மீள்பெறல்களிலிருந்து எழுகின்ற மூலதன இலாபங்கள் மற்றும் வருமானத்திலுள்ள வீழ்ச்சி காரணமாக இது குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் மூன்று நலனாளிகள் மாத்திரம் ரூபா 1,258.9 மில்லியனை வைப்புச் செய்திருந்ததுடன் ஆறு நலனாளிகள் ரூபா 1,843.4 மில்லியன் தொகையான நிதிகளை மீளப்பெற்றிருந்தனர்.

(இ) 2012 நவம்பர் மாதத்தில் திரட்டு நிதியத்திற்கு நலனாளிகளின் முதலீடுகளில் (ரூபா 10.70 பில்லியன்) 94 சதவீதத்தை மாற்றியதன் விளைவாக, நிதியத்தின் நிதி அடிப்படை 2012 சனவரி 01 இல் ரூபா 11.79 பில்லியனிலிருந்து 2012 திசெம்பர் 31 இல் ரூபா 1.58 பில்லியன் வரை தேய்வடைந்திருந்தது. இது நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையை பாதித்திருந்தது.

(ஈ) நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பிரதான வருமான மூலமான முதலீட்டு மீதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 10.98 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) செயற்படுத்தப்பட்ட நிதியப் பாய்ச்சல் விபரங்கள் சமர்ப்பித்தல்

(ஆ) எம்ஐஎஸ் முறைமை

(இ) மீள்பெறுகைகளிற்கு நம்பிக்கை பொறுப்பாளர்களின் அங்கீகாரம்.

(ஈ) நம்பிக்கை பொறுப்பாளர்களுடைய கூட்டங்களை கிரமமாக நடாத்துதல்.

(உ) நலனாளிகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் நிறுத்திவைத்த மிகை நிதிகளை மீளாய்வு செய்தல்

(ஊ) பங்கிலாப பகிர்வு

(எ) நிதிகளை மாற்றுவதற்காக நலனாளிகளிடமிருந்து ஒப்புதல் பெறல்